**மாத்தளை மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றானது 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி முன்வைக்கப்பட்டதுடன் அந் நிதிக்கூற்று தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூன் 18 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 26 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 16,673,586 வரவு வைக்கப்பட்டு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 2,372,791 செலவு வைக்கப்பட்டதன் காரணமாக திரன்ட நிதி மீதி ரூபா. 28,601,590 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கினைப் பயன்படுத்தி கணக்குகள் சீர் செய்யப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். 2020 கணக்குகளில் சீர் செய்யப்பட்டுள்ளது |
| ஆ) | கழிவு போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற 26 இழுவை வண்டிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும் |
| (இ) | மாநகர சபைக்குச் சொந்தமான 5 கடைகளுடன் கூடிய காணியின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை | காணி கட்டடங்கள் கணக்கிடப்படல் வேண்டும். | உரிமையினை உறுதி செய்து கொண்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.2 **இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கபப்பட்டுள்ள ரூபா 42,156,034 தொகையன பொது வைப்புக் கணக்கு மீதி பொது வைப்பு பதிவேட்டின் பிரகாரம் ரூபா 33,859,215 ஆக இருந்தமையால் ரூபா 8,296,819 ஆன வித்தியாசம் இருந்தன. | வேறுபாடுகளை இணங்கண்டு கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலமாக காணப்படும் வித்தியாசங்கள் எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.3 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 இற்கு குறைந்த ரூபா 20,746,552 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11,684,262 தொகையான பெற வேண்டிய மீதிகளில் 2020 யூன் 10 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 42,361,292 ஆன தொகை அறவிட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்கு குறைந்த செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 72,415,794 இல் 2020 யூன் 10 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 158,953,382 தொகை செலுத்த வேண்டியிருந்தது. | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் செலுத்த வேண்டிய கடன் மீதிகளை துரிதமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.4 **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்கள் தொடர்பிலான மொத்தம் ரூபா 59,584,963 இற்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகள் மற்றும் அட்டவணைகள் மற்றும் கோவைகளை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் விரிவான அட்டவணைகள் மற்றும் கோவைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பெறுமதி | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 17ஆம் திகதிய 1597/8ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமாணிஈ v உப பிரிவு- 1(v), 4(v) மற்றும் 6(v) | 15 தொலை தொடர்பு கோபுரங்களுக்கான நிர்மாணிப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில் லை. | 460,000 | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கமை வாக செயற்படல் வேண்டும். | இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) 2015 மார்ச் 15 ஆம் திகதிய இல 1914/40 உடைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி iv(அ) பிரிவு மாகாண சபை அறிவித்தல் 3(i) | சபையின் அனுமதி பெறப்படாது சபை கூட்டங்களில் கலந்துகொண்டிருக்காத சபை உறுப்பினர்கள் 20 பேருக்கு மீளாய்வாண்டினுள் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | 1,070,000 | வரவின்மையை முறையாக அறிவித்தல் | வர்த்தமானி அறிவித்தலின் 3(1)1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அனுமதி எனும் நிபந்தனை பூர்த்தியாதலின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. |
| (இ) இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்து 5 தொடர்பில் விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்தவர்கள் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | 2,913,481 | குறிப்பிட்ட விசாரைண களை மேற்கொள்ள நடவடிக்கைக எடுக்கப்படல் வேண்டும். | பரிசோதனை குழுவின் அறிக்கைகளை பெற்று விரைவில் தேவையான எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) 1992 பெப்ரவரி 26ஆம் திகதிய 05/01/119 இலக்கத்தையுடைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுநிரூபம் | சுற்றுநிரூபத்தின் விதிமுறைகளுக்குப் புறம்பாக செயற்பட்டு திட்டமிடல் குழு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது டன்அக் கொடுப்பனவு தீர்வைக் .கட்டணம் மூலம் வழங்கப்படாது சபை நிதியினால் வழங்கப்பட்டிருந்தது. | 191,000 | சுற்று நிரூபத்தின் அறிவுறுத்தல் களுக்கமைவாக செயற்படல் வேண்டும்சு | திட்டமிடல் குழு கொடுப்பனவு தீர்வைக் கொடுப்பனவை விஞ்சி விடாத வகையில் குறித்த செலவு தலைப்புகளின் மூலம் செலுத்தப்பட்டுள்ளதைனக் குறிப்பிடுகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.64,769,012 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 99,916,360 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 45,000,000 | 36,673,649 | 24,963,721 | 28,403,873 | 36,722,000 | 36,384,186 | 36,615,594 | 24,248,573 |
| (ii) | வாடகை | 20.000,000 | 13,696,558 | 12,641,502 | 2,138,883 | 13,100,000 | 13,404,418 | 12,782,147 | 3,803,086 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 9,900,000 | 15,144,372 | 14,862,372 | 505,000 | 8,550,000 | 11,279,012 | 11,056,012 | 223,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 357,442,151 | 383,898,249 | 345,439,387 | 37,780,503 | 308,156,000 | 274,911,769 | 271,108,683 | 31,351,173 |
| | மொத்தம் | 432,342,151 | 449,412,428 | 397,906,982 | 68,828,259 | 366,528,000 | 335,979,385 | 331,562,436 | 59,625,832 |

2.2.2 **வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதி மொத்த நிலுவைத் தொகை ரூபா.10,000 ஐ தாண்டிய 283 தனியார் சொத்துக்களினதும் 48 அரச சொத்துக்களினதும் மொத்த நிலுவை வீதவரி முறையே ரூபா.8,161,234 மற்றும் ரூபா.3,428,468 ஐ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 மே 31 ஆம் திகதி முறையே ரூபா.7,375,274 மற்றும் ரூபா.3,232,416 மேலும் பெறப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.12.31 ஆம் திகதியன்று நிலுவை தொகையில் முறையே ரூபா.785,960 மற்றும் ரூபா.196,052 தொக 2020.05.31 ஆம் திகதி அறவிடப்பட்டிருந்தது. |

2.2.3 **வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடை வாடகை | | |
| (அ) 03 கடைத் தொகுதிகளுக்குச் சொந்தமான 13 கடைகளிலின் மூலம் 05 மாதங்கள் முதல் 14 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வருகின்ற கடை வாடகை ரூபா. 854,376 மற்றும் ஆரம்பக் கொடுப்பனவு ரூபா. 25,000 பெறப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) நாகொல்லையில் அமைந்துள்ள 1 ரூட் 25.7 பேர்ச் அளவான காணி ஒப்பந்த அடிப்படையில் 12 பேருக்கு 1988 ஆம் ஆண்டு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், குத்தகைக்காரரினால் அங்கு சட்டவிரோத நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக் கடைகளுக்காக ரூபா.31,280,000 குத்தகை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விரோத நிர்மாணிப்புகளுக்கான நடவடிக்கை எடுப்பதுடன் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். | இக் காணியின் உரிமை மாநகர சபைக்குச் சொந்தமானதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினால் கைமாற்றல் கட்டளை பெற்று மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொங்காவலை பேரங்காடியில் அமைந்துள்ள 03 கடைகளினதும் பல்பொருள் அங்காடியில் அமைந்துள்ள 03 கடைகளினதும் குத்தகை வாடகை திருத்தியமைக்கப்பட்டு ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பதற்காக அவற்றின் புதிய மதிப்பீட்டுப் பெறுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | அம்பகமுவ பேரங்காடியிலும் கொங்காவலை புதிய மற்றும் பழைய பேரங்காடிகளிலும் அமைந்துள்ள 32 கடைகள் முத்திரையிடப்பட்டு மூடி வைக்கப்பட்டிருந்தன. | மூடி வைக்கப்பட்டுள்ள கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | விலை மனுக்கள் கோரப்பட்டு குத்தகைக்காரர்களை தெரிவுசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முத்திரைக் கட்டணம் ரூபா 28,946,963 மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 4,224,058 அறவிடப்பட வேண்டி இருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். | அறவிடபபட வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் என்பற்றை அறவிடுவதற்காக மத்திய மாகாண சபையின் பிரதான செயலாரிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. |

### 2.2.6 **மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 226 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட ரூபா 530,396 மிகை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | மிகை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கெந்தகொல்ல தனியார் வீதி கொங்கிரீட் இடுவது தொடர்பாக ரூபா 20,936 தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவதுடன் வெளித்தரப்பினருக்காக வீடுகள் வழங்கியமை காரணமாக ரூபா 510,000 ஆன மிகை அவீடு தொடர்பான மேன்முறையீடு செய்ப்பட்டள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நோக்கங்களுக்குப் புறம்பான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் ஈட்டப்படுகின்ற மீண்டெழும் வருமானம் ரூபா.237,816,189 அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாது நிலையான வைப்புகளாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டெழும் வருமானம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக எதிர்காலத்தில் அப்பணத்தினை பாவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் |

**(ஆ) எதிர்பார்த்த பலன்களைப் பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாத்தளை நகர மையத்தில் அமைந்துள்ள பூங்காவுடன் கூடிய காணியின் உரிமையினை உறுதிப்படுத்தக்கூடிய சட்டபூர்வமான ஆவணங்கள் மாநகர சபையிடம் காணப்படாதிருந்ததுடன், பூங்காவிற்குச் சொந்தமாகவிருந்த சுமார் 6 ஏக்கர் நிலம் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016ஆம் ஆண்டில் ரூபா.7,692,264 செலவில் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு இடமாக பராமரிப்பதற்கும் மற்றும் சூழல் பெறுமதியினை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பூங்காவின் அழகுபடுத்தல் செயற்பாடுகள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்ததன் காரணமாக மாநகர சபை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. |

போதும், உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற விதத்திலான எந்தவொன்றையும் பூங்காவினுள் காணவில்லை. கடந்த 4 வருடங்களில் பூங்காவின் மீண்டெழும் செலவுகள் ரூபா.13,737,217 ஆகவிருந்ததுடன், குறித்த காலத்தினுள் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா.4,253,150 ஆகவிருந்தது.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக மொத்தம் ரூபா.31,500,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த 6 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தேவையை இனங்கண்டு முறையான திட்டத்துடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | இத் திட்டங்கள் பொதுச் சபையில் அனுமதிக்கப்படாமை, காணிகளில் இடர்பாடுகள் காணப்பட்டமை மற்றும் வேறு நிறுவனங்களால் இத் திட்டங்கள் செயற்படுத்தப்படாமை ஆகியன காரணமாக இருந்தன. |

**(ஈ) திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாத்தளை எம்.சீ.பாதையில் அமைந்துள்ள மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் 130 பேர் 40 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருவதுடன், அக் காணிகளை குறித்த குடியிருப்பாளர்களுக்கு நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக் காணிகளின் உரிமையினை உறுதி செய்யும் தகவல்கள் எதுவும் சபையில் காணப்படவில்லை. | காணிகளின் உரிமையினை உறுதிசெய்து குடியிருப்பாளர்களுக்கு உரிமையினை கையளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(உ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற் உக்கலடையக்கூடிய 405 டொன் கழிவுகள் மற்றும் உக்கலடையாத 106 டொன் கழிவுகளில் சுமார் 210 டொன் கரிம உரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய கழிவுகள் தனியார் இடமொன்றில் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டு வந்துள்ளது. இதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.இதன் காரணமாக வெளி நபர்களினால் மாநகர சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், 2019 ஆகஸ்ட் 21ஆம் திகதி வரை வழக்கு கட்டணமாக ரூபா. 4,585,986 சபை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. இதன் காரணமாக கழிவகற்றல் தொடர்பாக எதிர்காலத்தில் நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ளது. | காணியின் உரிமையினை உறுதி செய்துகொள்ளல், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறல் மற்றும் கரிம உரத் தயாரிப்பினை அதிகரித்தல் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும். | கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதுடன் வீடுகளில் கொம்போஸ்ட் தயாரித்தலை முறைப்படுத்தும் வகையில் 800 கொம்போஸ்ட் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. உக்கலடையாத கழிவுகளை வேறுபடுத்துவதற்கான நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கழிவுகளின் சேர்க்கை தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தினமும் 7.4 டொன் உக்கலடையும் கழிவு சேகரிக்கப்படுகின்றது. |
| (ii) | மாநகர சபையின் கழிவகற்றல் பிரச்சினைக்கான தீர்வாக விகாரகமவத்த பிரதேசத்தில் 5 ஏக்கர் அளவிலான காணியொன்றினை ரூபா. 2,000,000 செலவில் 2010ஆம் ஆண்டு கொள்வனவு செய்து, அதில் சுகாதார முறையிலான கழிவு நிலப் பன்படுத்தலுக்கான ஆரம்பத் திட்டமிடலுக்காக ரூபா. 400,000 செலவிடப்பட்டிருந்த போதும், கழிவு அகற்ற முடியாமல் அவ்விடம் பயனற்றுக் காணப்பட்டது. | இடத்தினை நோக்கத்தினை மையமாகக் கொண்ட தேவைக்காகப் பயன்படுத்த முடியாதவிடத்து, பொருத்தமான நடைமுறையினை மேற்கொள்வதுடன் கொள்வனவு செய்த அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஊ) சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாத்தளை மாநகர சபை அதிகார எல்லைப் பிரதேச குடியிருப்பாளர்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் கழிவு நீர் பொதுக் காண் தொகுதிகளுக்கு விடுவிக்கப்படல் மற்றும் மலசலகூடக் கழிவுகளை நீர் மூலங்களுக்குள் விடுவித்தல் மற்றும் மாத்தளை பொது வைத்தியசாலையின் கழிவகற்றல் தொகுதி செயலிழந்து காணப்படல் ஆகியவை காரணமாக இயற்கை நீர் மூலத்திற்கு ஏற்படும் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தலையீடு மற்றும் முன்னெடுப்பு போதிய அளவில் காணப்படவில்லை என்பது தொடர்பான சுற்றாடல் கணக்காய்வு அறிக்கை 2020 பெப்ரவரி 27ஆம் திகதி ஆளுனர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கழிவு நீர் அகற்றலுக்காக முறையான, நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்தல், சட்ட நடவடிக்கைகள் எடுத்தல், அவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் இயற்கை நீர் மூலங்களுக்கு ஏற்படும் தாக்கத்தினை குறைத்தல். | பதில் அளிக்கப்படவில்லை. |

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபையானது சரியான விதத்தில் அறிவுறுத்தப்பட்டு இன்மையால் அவ்விலக்குகளுக்கான சர்வதேச கோட்பாடுகளுக்கமைவாக சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தினை முன்னேற்றுவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் எதுவும் 2020 ஏப்ரல் 30ஆம் திகதி வரை திட்டமிடப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி செயற்படல் வேண்டும். | மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அரசின் இலக்கினை அடையும் வகையில் திட்டங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கடந்த 5 ஆண்டுகளினுள் சமர்ப்பிக்கப்பட்ட கட்டட விண்ணப்பப்படிவங்கள் 1325இல் 848 அனுமதிக்கப்பட்டிருந்த போதும், 189 இற்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. இக்காலப்பகுதியில் அனுமதிக்கப்படாத கட்டட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான பின்னூட்டல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட திட்டங்கள் விதிமுறைகளுக்க மைவாக செயற்படல் வேண்டும். | இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தினை நீடித்துக் கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாநகர சபைக்குச் சொந்தமான 87 ஏக்கர் 02 ரூட் 33.34 பர்சஸ் விஸ்தீரணமான 25 காணித் துண்டுகளுக்கான அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரைபடம் பெறப்பட்டிருந்த போதும் உரிமைச் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக பரப்பினை உறுதி செய்ய முடியாத 25 காணித் துண்டுகளின் உரிமையினை உறுதி செய்துகொள்வதற்கான எந்தவித ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்களும் காணப்படவில்லை. | காணிகளின் சட்டரீதியான உரிமையினை உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த காணிகளுக்கான கையளிப்புக் கட்டளையினைப் பெற்றுத் தருமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் , கையளிப்பினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252ஆம் அதிகாரத்தின் 36.1(iii) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2006 ஜனவரி 31ஆம் திகதிய சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் நிக்கொல்ல வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்பான சட்ட விரோத குடியிருப்பாளர்கள் 104 பேருக்கான காணிகள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் இக் காணிகளில் குறித்த சட்ட விரோத குடியிருப்பாளர்கள் தொடர்பாக மாநகர சபை அதிகாரச் சட்டத்தின்(252 அதிகாரம்) 36(1)(iii) மற்றும் 40(ஊ)(i) பிரிவுகளின் பிரகாரம் சனாதிபதியின் அனுமதியைப் பெற முடியாதிருந்துள்ளது. | வியாபார சட்டத்தின் விதிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் குடியிருப்பாளர்களுக்கான சட்ட அதிகாரத்தினைப் பெற்றுக்கொடுத்தல. | உரிமை மாநகர சபைக்கானது என உறுதி செய்யப்பட்டுள்ளதால் குறித்த காணிகளுக்கான கையளிப்புக் கட்டளையினை வழங்குமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டளையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 252ஆம் அதிகாரத்தின் 36.1(iii) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஈ) | நடைபாதை வியாபாரத்தினை நிறுத்தும் நோக்கில் அமைச்சரவைத் தீர்மாணத்தின் பிரகாரம் மாத்தளை புகையிரத நிலைய களஞ்சியசாலை எந்தவித ஒப்பந்தங்களும் இன்றி மாநகர சபைக்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் சுமார் ரூபா. 4,970,721 செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மாநகர சபையினால் வியாபாரிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.பின்னர் அவ்விடத்திலிருந்து வியாபாரிகளை ஒதுக்கி 2019 மார்ச் 12ஆம் திகதி பொதுச் சபை தீர்மாணத்திற்கமைவாக களஞ்சியசாலை மீண்டும் புகையிரத நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.இதன் காரணமாக வியாபாரிகளுக்கு மீண்டும் நடைபாதையில் வியாபாரம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதுடன் களஞ்சியசாலை திருத்தத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 4,970,721 பிரயோசனம் அற்றதாகவிருந்தது. மேலும் 2019 ஏப்ரல் 10ஆம் திகதியன்று புகையிரதத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா. 667,740 பெறுமதியான வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன், வியாபாரிகள் 43 பேரிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா. 249,000 பிணைக் கட்டணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | சபை நிதிக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் நிலுவையினை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா.393,400 வாடகைத் தொகையில் 2020.06.10 வரையில் ரூபா.206,000 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையான ரூபா.187,400 இனை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | ஆட்சேர்ப்பு விதிமுறைகளின்றி 40 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு நகர முதல்வரினால் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வூழியர்கள் தெரிவு செய்யப்பட்ட முறை தெளிவின்றிக் காணப்பட்டதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக 2018 டிசம்பர் மாதம் தொடக்கம் 2019 மார்ச் வரை ரூபா. 1,511,606 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | ஒழுங்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகள் கடைபிடிக்கப்பட ல் வேண்டும். | நகர முதல்வர் இணைத்துக்கொண்ட ஊழியர்களது நியமனங்கள் 2019.12.31 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள் உழைக்கும் வருமானத்திலிருந்து கொடுப்பனவு வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரச ஊழியர் சேமலாப நிதிக்கான உறுப்புரிமையினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா. 179,690 தொகை பொது வைப்புகள் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. | சட்டரீதியான முறைகள் பின்பற்றப்படல் வேண்டும். | குறித்த தொகையினை ஊழியர்களுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது அரச ஊழியர் சேமலாப நிதியில் வரவு வைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நகர முதல்வரினால் வழங்கப்பட்டிருந்த தற்காலிக நியமனங்கள் 2019.03.31ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 2019 ஏப்ரல் 09 மற்றும் 25ஆம் திகதிகளில் கமிஷன் செலுத்துதலின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சட்டங்கள், ஒழுங்குகள், விதிமுறைகள் மற்றும் சுற்றுநிருப அறிவுறுத்தல் களுக்கமைவாக செயற்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். முறையான வழிமுறைகள் பயன்படுத்தப்படாததன் காரணமாக நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) | பத்திரிகை விளம்பரத்தின் அடிப்படையில் கல்வித் தகைமையற்ற சுகாதார சிற்றூழியர்கள் 17 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள போதும், சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள 04 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையற்ற வழிமுறையின் மூலம் இணைத்துக்கொள்ளல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த பிரிவினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பத்திரிகை விளம்பரத்திற்கு முறனாக நகர ஆணையாளரின் நடவடிக்கை மூலம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | சிற்றூழியர்கள் மற்றும் சுகாதார சிற்றூழியர்கள் 44 பேர் பொறுப்பு வாய்ந்த அலுவலகம் சார்ந்த பதவிகளிலும், காவலாளர், சாரதி முதலான சேவைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சிற்றூழியர்களை உரிய சேவைகளில் ஈடுபடுத்தல் | அலுவலகம் சார்ந்த சேவைகளில் வெற்றிடங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை காணப்படாமை காரணமாக சிற்றூழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |
| (ஈ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று 31 அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கான 107 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அன்றைய தினம் அனுமதிக்கப்படாத 4 பதவிகள் உட்பட 6 பேர் மேலதிகமாகக் காணப்பட்டனர். | வெற்றிடம் காணப்பட்ட பதவிகளை பூரணப்படுத்துவதுடன், மேலதிக பதவிகள் தொடர்பாக முறையான வழிமுறை பின்பற்றப்படல் வேண்டும். | சுபைக்கான வெற்றிடங்கள் எதிர்காலத்தில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படுவதற்கும், ஏனைய வெற்றிடங்கள் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் பூரணப்படுத்தித் தருமாறும் வேண்டப்பட்டுள்ளது. |

3.4 **செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு பின்னர் சேவையில் நரந்தரமாக்கப்பட்ட 90 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட அங்கத்துவப் பணம் மற்றும் சபை சார்பான பணம் ரூபா. 8,352,228 அரச சேவை ஊழியர் சேமலாப நிதியில் வரவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட சேமலாப நிதி தொடர்பான தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | சுற்றுநிரூப அறிவுறுத்தல்களுக்கமைவாக தற்காலிக அடிப்படையில் (சமயோசித) சேவையாற்றிய காலப்பகுதி ஓய்வூதிய சம்பளத்துக்குரிய காலப்பகுதியாகக் கருதப்படுமாயின் அவர்களுக்குரிய சபை சார்பான பங்களிப்பினை செலுத்துவதற்காக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா. 491,080 பெறுமதியான முற்பணக் கொடுப்பனவொன்று அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முற்பண நிலுவை நீண்ட காலமாக காணப்பட்டு வருவதனால் உடனடியாக ஆராய்ந்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) ரூபா. 7,818,300 மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா. 1,022,000 தேசிய வருமானத் திணைக்களத்திற்கு வரவு வைக்கப்படாது சேமித்து வைக்கப்பட்டிருந்தது. | உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடனடியாக வரவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2012ஆம் ஆண்டில் வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுத் தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மாநகர சபையின் இயந்திர வேலைத்தளம் தற்பொழுது செலிழந்துள்ளது. | இயந்திர வேலைத்தளத்தினை இயங்கச் செய்து செயலாற்றுகையினை உயர் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இயந்திர வேலைத்தளத்தின் செயற்பாடுகளை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற/ குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மோத்தம் ரூபா. 4,317,500 பெறுமதியான 3 காணி கட்டடங்கள், 3 வாகனங்கள், ஒரு இயந்திர உபகரணம் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 2 காணி கட்டடங்கள் பயன்படுத்தப்படாமலும் குறைந்த பயன் பெறும் நிலையிலும் காணப்பட்டன. | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்தவும் ஏனைய வாகனங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒதுக்கப்பட வேண்டிய வாகனங்களை ஒதுக்காமல் இருப்பதற்கு மாநகர சபை தீர்மாணித்துள்ளதுடன், ஒரு வாகனம் ஏலவிற்பனையில் விற்கப்படாததன் காரணமாக எதிர்காலத்தில் பாவனைக்கு எடுக்கப்படுவதற்கு அல்லது ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.6 **கணக்கிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6 சட்ட விரோத வியாபார நிலையங்கள் 2018 ஜுலை 19ஆம் திகதி உடைத்து ஒதுக்கப்பட்ட போதும், அதன் பின்னர் 10 மாதங்கள் கழிந்த பின்னர் சபையின் அனுமதியின்றி ரூபா. 500 நாட்கூலி அடிப்படையில் 4 பிரிவினருக்கு வியாபார நிலையங்களை நடாத்திச் செல்வதற்கு நகர முதல்வரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | சட்ட விரோத நிர்மாணிப்புகள் அகற்றப்படல் வேண்டும். | 6 சட்ட விரோத வியாபார நிலையங்களும் சபையின் தீர்மாணத்திற்கிணங்க அகற்றப்பட்டிருந்த போதும், நகர முதல்வரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட குத்தகைக்காரர்களுக்கு மீண்டும் அவ்வியாபார நிலையங்களை குத்தகைக்கு விட்டு வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.7 **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகள் பின்பற்றப்படாமலும் குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்படாமலும் முறையற்ற விதத்தில் பல்தொகுதி அங்காடியின் மேல் மாடியில் முப்பரிமான சினிமாக் கொட்டகை ஒன்றினை அமைத்து பராமதிப்பதற்கு ரூபா. 82,000 மாதாந்த வாடகைக்கு 10 வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வெளி நபர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கமைய முறையான நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும. | ஒரு ஏலக் கொள்வனவாளர் மாத்திரம் முன்வந்துள்ள அதேவேளை ஏலவிற்பனை மதிப்பீட்டுக் குழுவினதும் சபையினதும் தீர்மாணத்திற்கமைய ஒப்பந்தம் குறித்த அந்தக் கொள்வனவாளருக்கு வழங்கப்பட்டது. |
| (ஆ) | மாநகர சபையின் முன்னால் மற்றும் அம்பகமுவ பேரூந்து தரிப்பிடத்திற்கு அருகில் அதி தொழிநுட்பம் வாய்ந்த 02 தொடர்பாடல் கோபுரங்கள் 2018ஆம் ஆண்டு சட்டவிரோதமாக நிர்மாணித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான மற்றும் சட்டரீதியான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். | அதி தொழிநுட்பம் வாய்ந்த 02 தொடர்பாடல் கோபுரங்கள் தொடர்பாக ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவர் தனது செயற்றிட்ட கூடத்தினை நடாத்திச் செல்வதற்காக 2018ஆம் ஆண்டில் மாநகர சபைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் பரப்பளவையுடைய பாராவத்த காணியை பயன்படுத்தி மேற்கொண்ட நிர்மாணிப்புகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டவிரோத நடவடிக்கைகள் சம்பந்தமான நட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 02 மாநகர சபை பொது மலசலகூடங்கள் மாநகர சபையின் 02 சிற்றூழியர்களினால் வெளி நபர்களைக் கொண்டு சட்ட விரோதமாக பராமரிக்கப்பட்டு மீளாய்வாண்டின் ஜனவரி தொடக்கம் செப்டம்பர் வரை பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட ரூபா. 462,880 தொகை முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைகேடுகள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மலசலகூடங்கள் தொடர்பாக ஒழுங்கான முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | தற்பொழுது சகல பொது மலசலகூடங்களும் மாநகர சபையின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வருமான பரிசோதகர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | ஆம்பகமுவ கடைத் தொகுதியில் இரண்டாவது கட்டடத்தின் கீழ் மாடியினுள் சட்டவிரோத கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 10ஆம் இலக்க கடையினுள் சட்டவிரோத மீன் விற்பனை நிலையமொன்றும் நடாத்தப்பட்டு வந்துள்ளது. | சட்டவிரோத கட்டடங்களை அகற்றல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக களப் பரிசோதனையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்பொருள் அங்காடியின் இரண்டாம் மூன்றாம் மாடிகளை வாடகைக்கு வழங்குவதற்கு வாடகைதாரர்கள் 18 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா. 1,004,587 பிணை வைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் கடைகளை நிர்மாணித்து வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 டிசம்பர் 31 தொடக்கம் 2019 ஜுன் 30 வரையிலான காலப்பகுதியினுள் பெற முடியுமாகவிருந்த ரூபா. 10,237,500 வாடகை வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை. | தேர்ந்தெடுக்கப்பட்ட வாடகைதாரர்களுக்கு கடைகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த பிரிவினர் இனங்காணப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாத வகையில் செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 இலக்கத்தையுடைய அரச நிருவாக சுற்றறிக்கைக்குப் புறம்பாக 18 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர் 2015 செப்டம்பர் 23ஆம் திகதிய சபையின் தீர்மாணத்திற்கு அமைவாக அந் நியமனங்கள் இரத்துச்செய்யப்பட்டதன் காரணமாக அவ்வூழியர்கள் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, வழக்கு தீர்வின் அடிப்படையில் ஊழியர்களுக்கு மீண்டும் நிரந்தர நியமனங்களை வழங்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக வழக்கு நடவடிக்கைகளுக்கான செலவு ரூபா. 250,000 சபைக்கு ஏற்பட்டிருந்தது. | வழக்குக் கட்டணங்களை அறவிடுகையில் முறையற்ற விதத்தில் இணைத்துக்கொள்ளப் பட்ட ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டம். | 2018.12.06 திகதிய 06:1:01:59 இலக்கத்தையுடைய மாநகர சபை தீர்மாணத்தின் படி மேல் நீதிமன்ற SC/FR/2015/2017 ஆம் இலக்க வழக்கில் வழக்கறிஞர் கட்டணமாக நகர சபை செலுத்தியுள்ள நிதியினை, முறைப்பாட்டினை செய்த நியமனம் பெற்றவர்களிடம் அறவிடுவதற்குத் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | விளம்பரப் பலகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கை மற்றும் பௌதிக பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு எண்ணிக்கை என்பவற்றுக்கிடையில் காணப்பட்ட வேறுபாடுகள் காரணமாக குறைவாக அறவிடப்பட்ட தொகை ரூபா. 263,875 ஆகவிருந்தது. | விளம்பரப் பலகைகள் முறையாக இனங்காணப்பட்டு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | 2018ஆம் ஆண்டில் நகர சபை எல்லையினுள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் சதுர அடிகளின் எண்ணிக்கை அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | அண்ணளவாக ரூபா. 24 மில்லியன் செலவில் கழிவு எரிக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படும் பொழுது தொழில்நுட்ப வழிமுறைகள் பின்பற்றப்படாது முறையற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்த விவரக்குறிப்புகள் காரணமாக கிடைக்கப்பெற்றிருந்த விலைமனுக்களை பரிசீலிப்பதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மறுத்தமையினால் பத்திரிகை விளம்பரங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 121,193 நட்டம் ஏற்பட்டிருந்தது. | முறையான தொழில்நுட்ப நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன், நட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவினர் இனங்காணப்படுவ தற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்வைத்திருந்த அனைத்து நிறுவனங்களும் அழைக்கப்பட்டு குறித்த உற்பத்தி தொடர்பான தொழில்நுட்ப முன்வைப்பு நடாத்தப்பட்டது. அம் முன்வைப்புகளின் அடிப்படையில் கழிவு எரிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமை முறையற்றதென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

**3.9 வெளிப்படையான முறைகேடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 வருடங்களில் வாகன கட்டுப்பாட்டு ஊழியர்களுக்கு வழங்குவதற்காக வருமானப் பிரிவு அதிகாரிகள் மூவருக்கு களஞ்சியசாலையினால் வினியோகிக்கப்பட்ட ரூபா. 234,000 பெறுமதியான 52 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மீளக் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பற்றுச்சீட்டுப் புத்தகங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பற்றுச்சீட்டுப் புத்தகங்களில் குறித்த தொகைகள் அறவிடப்பட்டு, அவர்கள் பாவித்த பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் காரியாலயத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.10 பெறுகைகள்**

**3.10.1 விநியோகம் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்கள் 9 பேரிடம் ரூபா. 28,837,085 பெறுமதியான 34 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. 5 ஒப்பந்தக்காரர்கள் முறையற்ற விதத்தில் ஒன்றுசேர்ந்து மதிப்பீட்டுப் பெறுமதியை விடக் கூடிய தொகைக்கு ஒப்பந்தத்தினை விண்ணப்பிக்கும் முறைகேடான செயலில் ஈடுபட்டிருந்த போதும், அவ்வொப்பந்தக்காரர்களுக்கே நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | முறைகேடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விலைமனுக்கள் முன்வைக்கப்படும் போது ஒப்பந்தக்காரர்கள் முறையற்ற விதத்தில் ஒன்றுசேர்ந்து மதிப்பீட்டுப் பெறுமதியை விடக் கூடிய தொகைக்கு ஒப்பந்தத்தினை விண்ணப்பித்தலானது எமது நிறுவனத்தினால் கட்டுப்படுத்த முடியாத ஒரு விடயமாக உள்ளதால் உப விதிகள் மற்றும் பெறுகைகள் வழிகாட்டியின் அடிப்படையில் எமது நிறுவனம் செயற்பட்டுள்ளது. |

### 3.10.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 4 பாதைகளுக்காக 32 சந்தர்ப்பங்களில் டிபர் வண்டிகளில் கோல்ட் மிக்ஸ் போக்குவரத்து செய்யப்பட்டிருந்த போதும், 4 சந்தர்ப்பங்களில் மாத்திரமே பாரம் நிறுக்கப்பட்டிருந்தது. இதில் 3 சந்தர்ப்பங்களில் நகர சபையின் கண்காணிப்பின்றி விநியோகஸ்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அச் சந்தர்ப்பங்களில் தேறிய நிறைகள் 15275, 15130 மற்றும் 15190 கிலோவாகவிருந்தன. எனினும் நகர சபை எழுமாறாக நிறையை பரிசோதித்த போது கோல்ட் மிக்ஸ் இன் தேறிய நிறை 9740 கிலோவாகவிருந்தது. இதன்படி கொள்வனவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த 460 மெட்ரிக் டொன் கோல்ட் மிக்ஸ் சரியான முறையில் பெறப்பட்டதற்கான உறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | முறையற்ற விதத்தில் செயற்பட்ட பிரிவினர் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக கோல்ட் மிக்ஸ் பெற்றுக்கொள்கையில் எழுமாறாக நிறையை பரீட்சித்துப் பார்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென க் குறிப்பிட விரும்புகிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு மாநகர சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்த 14 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்படாமல இருந்ததுடன் அக்கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 96,726,792 ஆக இருந்தது. | பதில்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு விசாரணைகளுக்காக விரைவில் பதில் அளிக்கப்படும். |